அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 27/2013

எனது இல : EST -7/OFTIM/07/3020
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு – 07

2013.11.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**மோட்டார் வாகன சாரதிகளின் கடமை நேரங்கள்**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2003.04.03 ஆந் திகதிய 04/2003 ஆம் இலக்கமிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்பால தங்கள் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை இரத்துச் செய்வதற்கும் பின்வரும் ஏற்பாடுகளை உள்ளடக்கி புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கும் 2013.10.03 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. மோட்டார் வாகன சாரதிகள் 5 நாட்களைக் கொண்ட கிழமையொன்றில் மதிய உணவு இடைவேளை உள்ளடங்களாக ஒன்பது (9) மணித்தியாலங்கள் கடமை புரிதல் வேண்டும்.

II. 6 நாட்களைக் கொண்ட கிழமையொன்றில் கடமை புரிவதாயின் மதிய உணவு இடைவேளை உள்ளடங்களாக ஏழரை (7½) மணித்தியாலங்கள் கடமை புரிதல் வேண்டும்.

III. சனிக்கிழமைகளிலும் கடமை புரிய வேண்டிய சாரதிகள், சனிக்கிழமைகளில் (6½) மணித்தியாலங்கள் கடமை புரிவதன் மூலம் கிழமை ஒன்றிற்கு 45 மணித்தியாலங்கள் கடமை புரிய அனுமதிக்கப்படுவார்கள்.

IV. குறித்தொதுக்கப்பட்ட அல்லது விஷேட கடமைகள் ஒப்படைக்கப்படாத சந்தர்ப்பங்களில் குறித்தொதுக்கப்படாத வாகனங்களின் சாரதிகள் மாத்திம் அலுவலகத்திற்கு சமுகமளிக்கப்பட வேண்டிய நேரம் மு. ப 8.00 மணி ஆகும் என்பதோடு திணைக்களத் தலைவரின் தீர்மானத்திற்கமைய பி. ப. 4.15 மணிக்கு அலுவலகத்திலிருந்து வெளியேறிச் செல்ல இடமளிக்கலாம்

V. மேலே உள்ள உப பந்திகள் I,II,III இல் குறிப்பிட்ட கால அளவுகளைப் பூர்த்தி செயத பின்னரான மணித்தியாலங்களின் எண்ணிக்கைகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு விண்ணப்பக்க முடியும்.

03. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுகவல்கள் அமைச்சு